இந்திக்காரர்களுக்கு இந்தியா முழுவதும் வேலை எனக் கூறி வாக்கு சேகரிக்கவே

# ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்தியைத் திணிக்கிறது!

## நாமக்கல்லில் வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் பேச்சு!



நாமக்கல், மார்ச்.16-

இந்தி படிப்பதால் தமிழனுக்கு வேலை இல்லை. இந்திக்காரர்களுக்கு இந்தியா முழுவதும் வேலை எனக் கூறி வாக்கு சேகரிக்க இந்தியை நீணிக்கிறது ஒன்றிய அரசு என தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் குறிப்பிட்டார்.

நாமக்கல் மேற்கு பு. வேலூர், அண்ணா சிலை அருகில் நடைபெற்ற ஒன்றிய அரசின் மீதான கண்டன பொதுக்கூட்டத்தில்,

**வெட்கமாக இல்லையா?**

“தவோதயா பள்ளி வேண்டாம் என அன்றைய பாரத பிரதமர் இராஜீவ் காந்தியிடம் அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் கூறியபோது எம்.ஜி.ஆருக்கு நிதி தர மறுத்து மிரட்டப்படமில்லை. இப்போது மிரட்டுகிறீர்களே வெட்கமாக இல்லையா? எங்கள் நிதியை எங்களுக்கு தருவதற்கே மிரட்டலா?

நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா, மொராஜி, வாஜ்பாய், வி.பி.சிங், நரம்சிம்மராவ், குஜ்ரால் தேவகவுடா என யார் காலத்திலும் மாநிலங்கள் மிரட்டப்பட்டதில்லை. பேட்டை ரவுடியைப்போல் குரல் எழுப்பியதில்லை.

“இரும்பு” அகல்வாராய்வின்படி 5,500 ஆண்டுகளுகக முற்பட்ட தமிழை 300 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட இந்தி அடக்கப்பார்க்கக் கூடாது.

இந்தியை தாய்மொழியை கொள்ளாத குஜராத்தி மோடியும், குஜராத்தி அமித்ஷாவும், ஓரியா தர்மேந்திர பிரதானும் இந்தியை திணிப்பதாக நடித்து இந்திக்காரர்களின் வாக்குகளை பெறுவதற்கு முயல்கிறார்கள். இந்திக்காரர்களிடம் வாக்கு வாங்கிடரும் நிதியை தர மறுக்கிறார்கள்.

ஒரு காலத்தில் கத்தி சண்டை, பின் பீரங்கி படை எடுத்து தமிழனின் வளங்களை அள்ளிச்சென்று இந்தியர்களை கவர்ந்தனர்.

மதவெறுப்பை தூண்டியும், பின் இராமர் கோவில் கட்டுவது என்றும் வாக்கு வங்கியை உயர்த்திக் கொண்டனர்.

இப்போது இந்தி மொழியை இந்தியா முழுவதம் பரப்புவதாககூறி, இந்தியாவில் அதன்மூலம் வட இந்தியாவின் இந்தியை, தென் இந்தியா முழுக்கும் பரவும் எனக்கூறி, வட இந்தியர்களின் வாக்கை பெற நம் மீது இந்தியை திணிக்கிறார்கள்.

முந்திரி மூட்டைக்குள் வண்டு புகுந்தால் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டால், முந்திரி கூடுதான் வண்டுடன் இருக்கும்.

அப்படித்தான் ஆவாதி, ராஜஸ்தானி, மைத்ரேயா, போஜ்புரி, சதாதி, மகதி, பிகாரி மொழிகள் மறைந்து வருகின்றது.

**56% ஆசிரியர் பணி காலி!**

இந்தி மட்டும் போதுமென்றால், இங்கிலாந்தின் பிரதமராக ரிஷிசுனக் வந்திருப்பாரா? கமலா ஹாரிஸ் அமெரிக்க துணை அதிபராக வந்திருப்பாரா? போர்ச்சுக்கல் ஆண்டோனியா, சிங்கப்பூரில் ஹலிமா யாகூப் நாதன் அதிபர்களாக வந்திருப்பார்களா? சுந்தர் பிச்சை, உஷாசில்க் ஓரி, பிரமிளா ஜெயபால் கொடி நாட்டி பறப்பது எப்படி?

அந்திரா சந்திரபாபு தயுடு கூறினார், “மும்மொழி என்ன பத்து மொழி கற்கலாம். ஆனால் உலகின் பல்வேறு நாடுகளில் இன்று உயர்ந்த இடத்தின் அருகில் இருப்பவர்கள் தமிழர்கள். அதற்கு அறிவாற்றலுடன் ஆங்கில மொழி கற்றதுதான் முக்கியம்” என்றார்.

ஆந்திரா சந்திரபாபு நாயுடு கூறினார், “மும்மொழி என்ன பத்து மொழி கற்கலாம். ஆனால் உலகின் பல்வேறு நாடுகளில் இன்று உயர்ந்த இடத்தின் அருகில் இருப்பவர்கள் தமிழர்கள். அதற்கு அறிவாற்றலுடன் ஆங்கில மொழி கற்றதுதான் முக்கியம்” என்றார்.

பீகாரில் 2 லட்சம் பள்ளிகள் உள்ளன. 56% இடம் ஆசிரியர் பணி காலியாகவே உள்ளன. கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல் இவைகளுக்கு ஆசிரியர்கள் இல்லை. இந்திக்கு மட்டும்தான் ஆசிரியர் உள்ளனர்.

மூன்றாவது மொழிக்கு ஆசிரியர்கள் தேடினால் ஏறத்தாழ ஒரு கோடி ஆசிரியர் தேவைப்படும்.

ஏறத்தாழ 95 ஆண்டுகால போராட்டம். 60 ஆண்டுகளுக்கு முன் பக்தவச்சலம் காலத்தில் தென்னக மக்கள் விரும்பும் வரை இந்தி திணிப்பு இராது என அன்றைய பிரதமர் நேரு வாக்குறுதி தந்தார். 60 ஆண்டுகாலம் நீடித்த அந்த உறுதிமொழி இப்போது மீறப்படுகிறது.

நிதி ஒதுக்கீட்டில் “பாஸ்” செய்யப்பட்ட பட்ஜெட்டில் நிறைவேறியதை ஒரு அமைச்சர் நிறுத்தி வைக்க அதிகாரம் இல்லை.

முதலில் நம்மை தஞ்சை பெரியகோவில் சரபோஜி காலத்தில் மாராட்டியம் கற்றால் தான் வேலை தருவோம், கூலி தருவோம் என யாரும் மிரட்டவில்லை. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தெலுங்கு தெரியாம வேலை இல்லை என கூறவில்லை.

**உட்கார்ந்து உறங்கிய அ.தி.மு.க.!**

2019ஆம் ஆண்டு இந்தியாவின் ஒரே மொழி இந்திதான் என்று அமித்ஷா சொன்னதாக தகவல் வந்தது. ஆளும்கட்சி அ.தி.மு.க. உட்கார்ந்து கொண்டே உறங்கியது. ஆனால் தளபதி அவர்கள், “வாபஸ் பெறாவிட்டால் 1965 போராட்டத்தை மீண்டும் தி.மு.க. நடத்தும்” என தளபதி அறிக்கை வெளியிட்ட உடனே அன்றைய கவர்னர் பன்வாரிலால் புரோகித் தளபதியை அழைத்து நான் அப்படி சொல்லவே இல்லை என அமித்ஷா கூறுகிறார் என்றார். அதை அடுத்து போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

தாங்கள் ஆளும் கட்சியா, எதிர்கட்சியா என நினையாது, ஒன்றிய அரசால் மக்கள் பாதிக்கும்போதெல்லாம் தன் எதிர்ப்பை தெரிவிப்பது கலைஞர் காலத்திலிருந்து தி.மு.க. தன் சுய நிலையாக தொடர்கிறது.

1971ல் அன்னை இந்திராவுடன் உறவாக இருந்தாலும், எமர்ஜென்ஸி காலத்தில் தேசிய தலைவர்களை கைது செய்ததை தி.மு.க. எதிர்த்ததுடன் பல தலைவர்களும் ஒளிந்து, மறைந்து வாழ்வதற்கு வாய்ப்பு வழங்கியது. அதனாலேயே தன் ஆட்சியை இழந்தது. அதேபோல் ஈழத்தில் ஒன்றிய அரசு தமிழர்களுக்கு எதிராக நடந்தபோது, ஒன்றிய அரசுடன் ஒத்துப்போகாமல் தனி முடிவு எடுத்து அன்றைய ஈழத்தமிழர்களை ஆதரித்ததால் தன் ஆட்சியை இழந்த கட்சி தி.மு.க.

மாநில நிர்வாகத்தில் ஆய்வு செய்கிறேன் என அன்றைய கவர்னர் புறப்பட்டு சென்று கொண்டிருந்தபோது தி.மு.க. எதிர்க்கட்சி என்றாலும் ஆங்காங்கே கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்து கவர்னரை, கவர்னர் மாளிகைக்குள்ளேயே அடக்கி வைத்தது.

நீட் பிரச்சனையில் 7.5% சதவீதம் ஒதுக்கீடு வேண்டி தங்கத் தளபதியும், இளைய நிலா உதயநிதியும் கவர்னர் மாளிகை முன்பு பெருந்திரளுடன் போராட்டம் செய்தார்கள்.

**அ.தி.மு.க. ஒரு நெட்டை மரம்!**

ஆனால் அ.தி.மு.க.வினர் இந்தி திணிப்பை, திணிக்கிற ஒன்றிய அரசின் செயலை, பாராளுமன்ற இருக்கையை தமிழகத்தில் குறைக்கின்ற செயலை காகித அறிக்கைளில் கண்டிக்கிறார்களே தவிர, ஆர்ப்பாட்டமோ, போராட்டமோ செய்வதில்லை. டெல்லி மேலவையில் எதிர்ப்பை காட்டுவதில்லை.

“நீங்கள் இந்தியாவில்தான் வசிக்கின்றீர்கள் என்றால் இந்தியைத்தான் பேசவேண்டும். இல்லை என்றால் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும்” என பா.ஜ.க. அமைச்சர் சஞ்சய் நிஜாஷ் பேசி 10 நாள் ஆகியும் அ.தி.மு.க. நெட்டை மரமாக இருந்து என்ன பயன்?

ஜெயலலிதா தனது ஆட்சி காலத்தில் ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கும் எந்த நிகழ்விலும் அனைத்துக்கட்சி கூட்டம் நடத்தமாட்டார். ஆனால் தி.மு.க. அழைத்தது. அ.தி.மு.க.வோ கூட்டத்தில் ஒன்றும், வெளியே ஒன்றுமாக கேவலப்பட்டு நிற்கிறது.

**திசை திருப்புவதை நிருத்துங்கள்!**

அன்று சேது சமுத்திர திட்டம் அமுல் படுத்தினால் “இராமர் பாலம்” என கூக்குரலிட்ட பா.ஜ.க. இன்று “ஹைட்ரோ கார்பன்” எடுப்பது தவறு என கூறாதது கூட பரவாயில்லை. அ.தி.மு.க. அமைதிகாப்பது ஏன்?

40,000 கோடி ரபேல் ஊழலை சொன்னால் நீதி மன்றத்தில் கோப்பு இல்லை. தொலைந்து விட்டது என்று சொன்னவர்கள், 7,50,000 கோடி ஊழல் என சி.ஏ.ஜி சொன்னால், சொன்ன அதிகாரி இடமாற்றம் செய்தவர்கள் மொழி பிரச்சினையில் தடித்த வார்த்தைகளை கூறியதை மடைமாற்றம் செய்ய, டாஸ்மாக் எதிர்ப்பு என திசை திருப்புவதை இந்த தமிழ்நாடு ஏற்காது. உத்தமர் வேடம்போட்டு உலா வருகின்றனர்.

இவ்வாறு தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்திற்கு நாமக்கல் மாவட்ட மேற்கு மாவட்ட செயலாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமை வகித்தார்.

ஆதிதிராவிடத்துறை நல அமைச்சர் மதிவேந்தன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞர் கிரி, சிவகுமார், நகர செயலாளர் முருகன், ஒன்றிய செயலாளர்கள் தனராசு, சண்முகம், தங்கவேல், நெல்லை தனசேகரன், கோதை மதிவாணன், சேலம் உமாராணி, கருணாநிதி, ரமேஷ்பாபு, முருகவேல், ராமலிங்கம், சோமசேகர், மணி, லட்சுமி முரளி, அன்பரசு, ராஜா, பூக்கடை சுந்தர், மதியழகன், தமிழ்செல்வன், பிரதாப் சக்கரவர்த்தி, சௌந்தராஜன், செந்தில்நாதன் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பா.ஜ.க. மாவட்ட இளைஞர் அணி செயலாளர் ஜெயசூர்யா அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாள் விழா மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள் புகழரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. வட்டக் கழகச் செயலாளர் எம்.இ.சேகர் எம்.சி., தலைமையில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், புகழரங்கத்தை துவக்கி வைத்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார். நடிகர் ராஜேஷ், கவிஞர் பா.விஜய் ஆகியோர் புகழுரையாற்றினர். முகப்பேர் சின்னசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி., பகுதி செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி. உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# 2026 இல் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய தீவிரமாக பாடுபடுவோம்!

## தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை விற்பனை பண்டக சாலை தொ.மு.ச. சென்னை மாவட்ட கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மார்ச் 16 -

தமிழ்நாடு கூட்டுறவு நியாயவிலை கடை மொத்த விற்பனை பண்டகசாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சென்னை மாவட்ட கூட்டம், நாம்கோ.மு.ஜெயச்சந்திரன் செயலாளர் தலைமையில் 14.03.2025 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இதில் நியாயவிலை கடை மாநில பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம், மொத்த விற்பனை பண்டக சாலை பொதுச் செயலளார் சு.பத்மநாபன், விற்பனை சங்க மாநில பொதுச் செயலாளர் சி.தணிகாசலம், பிரதம கூட்டுறவு பண்டகசாலை மாநில பொதுச் செயலாளர் ஆர்.மகேந்திரன் TUCS பொதுச் செயலாளர் இராஜன் சாமிநாதன், சென்னை வடக்கு நிர்வாகிகள் செல்வகுமார் செல்லமாரியப்பன், உமாபதி, ஆர். புகழேந்திரன், தெற்கு மாவட்ட நிர்வாகிகள் என். இலட்சுமணன், டி.கருணாகரன் நாம்கோ நிர்வாகிகள் திருமதி. ச.தரணி, திருமதி. எம்.குப்பம்மாள், பி.ஸ்ரீகாந்த், காஞ்சிபுரம் மாவட்ட நியாய விலை கடை செயலாளர் D.கோவிந்தராஜ், சிந்தா மணி, தொ.மு.ச. செயலாளர் அலிசன், திருமதி.பிரிதா, ஜான்சன், விஜயகுமார், ஆனந்தன், சென்னை தெற்கு மாவட்ட நிர்வாகி பக்தவச்சலம், திருவள்ளூர் மாவட்ட பாபு, சத்தியா, ஜோதி உள்ளிட்ட நிர்வாகிகள் - உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை இரா.பொன்னுராம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் 2026ல் ஆட்சியமைத்திட பாடுபடுவோம் என தீர்மானிக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே பொது விநியோக திட்டம் முழுமையாகவும் சிறப்பாகவும் நடைபெறுகிறது என தமிழ்நாடு அரசை உச்சநீதிமன்றம் பாராட்டியது. அதற்கு காரணமான பொதுவிநியோக திட்ட பணியாளர்களுக்கு பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் இயங்குகின்ற நியாயவிலை கடைகள் நுகர்பொருள் வாணிப கழகம், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், கூட்டுறவு விற்பனை சங்கம், கூட்டுறவு தொடக்க வேளாண்மை சங்கங்கள், கூட்டுறவு பிரதம பண்டசாலைகள், மகளிர் சுயஉதவி குழு மற்றும் இதர அமைப்புகளால் நடத்தப்படும் நியாயவிலைகடைகள் தமிழ்நாடு அரசின் கீழ் ஒரே அமைப்பாக ஏற்படுத்திட வேண்டும் என இக்கூட்டத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

TNCSC கிடங்கில் இருந்து வரும் அரிசி, பருப்பு, கோதுமை முறையாக எடைபோடுவது இல்லை. கிடங்கில் இருந்து வரும் அரிசி மூட்டை 46kg, 48 kg கடைகளுக்கு வருகிறது. வாணிப கழக கிடங்கில் எடை போட்டு ஏற்றுவது இல்லை. இதனால் எடை தராசு POS மிஷினும் இணைப்பதால் இருப்பு பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

1000த்திற்கும் மேல் குடும்ப அட்டைகள் உள்ள கடைகளில் பெண்கள் விற்பனையாளராக பணிபுரிந்து வருகின்றனர். அந்த கடைகளில் கட்டுநர்கள் நியமிக்கப்படவில்லை. எடை தாராசு POS மிஷினும் இணைப்பதால் அவர்கள் ஒரு நாளைக்கு 30 முதல் 45 குடும்ப அட்டைகளுக்குத்தான் பொருள்கள் வழங்க இயலும் என்பதால் விற்பனையில் சுணக்கம் ஏற்படும்.

கைரேகை பதிவு கருவியின் மூலம் விற்பனை செய்யும்போது கைரேகை பதிவு செய்யும் பொது சர்வர் கால தாமதம் ஏற்படுவதால் அட்டைதாரர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு வருகிறது.

எடை தாராசில் பொருத்தப்படும் “சென்சார்” கள் எடை மெஷின்களுக்கு கீழாக வைப்பதால், எலிகள் கடித்து பழுதாகிவிடுகிறது. மேலும், எடை தராசு சென்சாரும் POS மிஷினும், 1 மீட்டர் சுற்றளவுக்குள் இருந்தால் மட்டுமே ஓரளவு இத்திட்டம் செயல்படுத்த முடியும். 1 மீட்டர் அளவினை தாண்டிவிட்டால், சுத்தமாக இத்திட்டம் செயல்படாத நிலை உள்ளது.

நவீன தொழில்நுட்பம் என்பது, மேல் இருந்து கீழாக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே, எத்திட்டமும் சிறப்பு பெறும். அந்த வகையில், எடை மிஷின், “சென்சாரை” (Sconsor) ஒவ்வொரு நுகர்பொருள் வாணிப கழக கிடங்கிலும் நடைமுறைப்படுத்தி, ஓர் நுகர்பொருள் கிடங்கு பணியாளரை, அதற்கு பொறுப்பாளராக நியமித்து, சரியான எடையுடன், சிந்து தல், சிதறுதல் இன்றி, நியாயவிலை கடைகளுக்கு பொருள்கள் வந்தடைய முன் முயற்சி எடுத்தப்பிறகே நியாயவிலை கடைக்கு இந்த மென்பொருளை முன்னெடுத்திட வேண்டும்.

POS கருவியுடன் எடைத்தராசு இணைப்பதன் மூலம் பில் போடும் பணியும், எடை போடும் பணியும், ஒரே நேரத்தில் செயல்பட வேண்டும். கிராமப்புறங்க ளில் எடையாளர் பணியிடம் இல்லாததால் இத்திட்டத்தினை செயல்படுத்த முடியாது. நகரங்களில் தற்போது போதிய கட்டுநர்கள் இல்லை. கட்டுநர் காலிப் பணியிடம் அதிகமாக உள்ளது. மேலும் குடும்ப அட்டைதாரர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். முதியோர், ஊனமுற்றோர் மற்றும் கர்ப்பிணி பெண்கள் பில்போடும் இடத்திற்கும், எடைபோடும் இடத்திற்கும் அலைச்சல் பட வேண்டியிருக்கும். குடும்ப அட்டைதாரர்கள் நிதானமாக பொருட்கள் வாங்க முடியாமல் அல்லல் பட நேரிடும்.

திங்களின் இறுதிநாளில் மாதாந்திர விற்பனை கணக்குகளை முடிக்க ஏதுவாக மாதத்தின் கடைசி நாள் விற்பனையை தவிர்த்திட வேண்டும்.

POS மிஷின் கையாள இணையதள வேகம் போதாத காரணத்தால் பணியாளர்கள் தங்கள் கைபேசி மூலம் Wifi Connect செய்து வருகின்றனர். எனவே பணியாளர்களுக்கு மாதந்தோறும்ரூ.500/வழங்கப்பட வேண்டும்.

ஆய்வு மேற்கொள்ளும் அலுவலர்கள் தங்கள் கைபேசிமூலம் ஆய்வு மேற்கொள்ளாமல் நியாயவிலைக் கடைகளில் உள்ள POS machine ல் மட்டுமே ஆய்வு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளில் வேலை நேரத்தினை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 600 மணி வரை என நேரத்தினை மாற்றி அமைத்திட வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக இரா.பொன்னுராம் தெரிவித்துள்ளார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பங்கேற்பு !

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் தலைவர் பிறந்தநாள் உணவு வழங்கல்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ வழங்குகிறார் ! எஸ். ஜெபதாஸ் பாண்டியன் அறிக்கை !

சென்னை, மார்ச் 16

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (16.03.2025) ஆர். கே.நகர் மேற்கு பகுதியில் உள்ள நிகழ்ச்சி வருமாறு :

மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் முருகன் ஏற்பாட்டில் முட்டை பிரியாணி வழங்குதல் பகல் 12.00 மணியளவில் வைத்தியநாதன் தெருவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு வழங்குகிறார். வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், கலந்து கொள்கிறார்கள்.

மேலும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் அறிக்கை விடுத்துள்ளார்.

